**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:– திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16–ம் நாள் வியாழன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை 03–ம் நாள்**

**<u>இடை நிலை மனு எண்.05/2025</u>**

**<u>இன்</u>**

**அசல் <u>வழக்கு எண்.167/2021</u>**

1. ராஜேஸ்வரி

2. புவனேஸ்வரி ... மனுதாரர்கள் / 2, 3 பிரதிவாதிகள்

**//எதிர்//**

ரோஜியம்மாள் ....எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. முருகன், அவர்கள் ஆஜராகியும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சசிகுமார், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை 8 விதி 1A(3) பிரிவு 151–ன் படி இம்மனு தாக்கல்.

**<u>2. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–</u>**

மேற்படி வழக்கு தற்போது மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சர்வே எண் சொத்துக்கள் குறித்து வாதி பெயரில் ஏற்பட்டு இருந்த அசல் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தினை மனுதாரர் மகனிடம் ஒப்படைத்து மனுதாரர் மகன் பெயருக்கு வாதி

தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஒன்றினை எழுதிக்கொடுத்து மனுதாரர் மகன் மாதேஸ்வரன் அனுபவித்து வந்த வகையில் வழக்கு சொத்திற்கு பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை ஏற்பட்டு இருந்து வருகிறது. மனுதாரர் மகனுடன் கூட்டு பட்டாதாரராக இருந்த மகாராஜா என்பவர் முறையாக பிரிக்காமல் மூன்றாம் நபருக்கு விற்க முயன்றதால் மனுதாரர் மகன் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்தின் மூலம் பாகப்பிரிவினை செய்து அனுபவித்து வந்த மனுதாரர் மகன் இறந்துவிட்டார். மனுதாரர் மகன் இறந்துவிட்டதால் தற்போது வாதி அவர் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரங்களை மறைத்து வழக்கு நடத்தி வருவதால் மனுதாரர்கள் தரப்பில் வழக்கு சொத்திற்கு வாதி எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் அவ்வாறு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்து அவரது பெயரில் இருந்த அசல் ஆவணத்தை ஒப்படைத்துள்ள அசல் தானசெட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் மனுதாரர் மகன் மாதேஸ்வரன் பெயரில் வழக்கு சொத்திற்கு உண்டான வருவாய்த்துறை ஆவணங்கள் மனுதாரர் மகன் வழக்கு சொத்திற்கு செலுத்தியுள்ள கந்தாய ரசீதுகள், மனுதாரர் மகன் இறந்த பிறகு மனுதாரர் மகள் பெயரில் மனுதாரர் வழக்கு சொத்தினை பொறுத்து எழுதியுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம், மனுதாரர் மகள் பெயரில் உள்ள வருவாய்த்துறை ஆவணங்கள் ஆகியவைகள் இந்த வழக்கிற்கு முக்கிய ஆவணங்கள் என்பதால் தற்போது மனுதாரர்கள் தரப்பில் ஒப்படைக்க இந்த மனுவினை தாக்கல் செய்கிறார். மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்கு மிக முக்கிய ஆவணங்கள் என்பதால் தற்போது தாக்கல் செய்வதை ஏற்று உத்தரவு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே மனுதாரர் தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்களை ஒப்படைக்க ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து தற்போது ஒப்படைக்கும் ஆவணங்களை ஏற்று உத்தரவு செய்ய வேண்டுமென்று இம்மனு தாக்கல்.

**3. எதிர்மனுதாரர்களின் எதிர் உரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மனுதாரர்கள் அவர்களது மனுவுடன் இணைத்து சமர்பித்துள்ள 4–ம் ஆவணமான 29.03.2004–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரூ.20/– மதிப்புள்ள நீதிமன்றம் சாரா முத்திரை தாளில் எழுதப்பட்டதாக உள்ளது. மேலும் பதிவும் செய்யப்பட்டிருக்கவில்லை. இவ்வாறாக உரிய முத்திரை தீர்வை செலுத்தப்படாத மற்றும் பதிவுறா தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல மற்றும் சாட்சியமாகவும் ஏற்கதக்கதல்ல. இவ்வாறாக சட்டப்படி செல்லதகா மற்றும் சாட்சியமாக ஏற்கதகா ஆவணத்தை மூலமாக கொண்டே மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள 5–ம் ஆவணத்தை தவிர இதர மற்ற ஆவணங்கள் அனைத்தும் பெறப்பட்டுள்ளது. எனவே இவைகளும் சட்டப்படி செல்லதக்கதல்ல மற்றும் சாட்சியமாக ஏற்கத்தக்கதும் அல்ல. எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள 5–ம் ஆவணத்தை தவிர்த்து இதர ஆவணங்கள் எதுவையும் சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்க இயலாது. எனவே மனுதாரர்களது இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யக் கூடிய ஒன்றாகும்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4. இம்மனுவின் தீர்மானிக்க கூடிய பிரச்சனை யாதெனில் – மேற்படி மனு அனுமதிக்க கூடியதாஎன்பதே ஆகும் ?

**5.தீர்வு:–**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் வழக்கு சர்வே எண் சொத்துக்கள் குறித்து வாதி பெயரில் ஏற்பட்டு இருந்த அசல் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தினை மனுதாரர் மகனிடம் ஒப்படைத்து மனுதாரர் மகன் பெயருக்கு வாதி தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஒன்றினை

எழுதிக்கொடுத்து மனுதாரர் மகன் மாதேஸ்வரன் அனுபவித்து வந்த வகையில் வழக்கு சொத்திற்கு பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை ஏற்பட்டு இருந்து வருகிறது என்றும், மனுதாரர் மகனுடன் கூட்டு பட்டாதாரராக இருந்த மகாராஜா என்பவர் முறையாக பிரிக்காமல் மூன்றாம் நபருக்கு விற்க முயன்றதால் மனுதாரர் மகன் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்தின் மூலம் பாகப்பிரிவினை செய்து அனுபவித்து வந்த மனுதாரர் மகன் இறந்துவிட்டார் என்றும், மனுதாரர் மகன் இறந்துவிட்டதால் தற்போது வாதி அவர் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரங்களை மறைத்து வழக்கு நடத்தி வருவதால் மனுதாரர்கள் தரப்பில் வழக்கு சொத்திற்கு வாதி எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் அவ்வாறு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்து அவரது பெயரில் இருந்த அசல் ஆவணத்தை ஒப்படைத்துள்ள அசல் தானசெட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் மனுதாரர் மகன் மாதேஸ்வரன் பெயரில் வழக்கு சொத்திற்கு உண்டான வருவாய்த்துறை ஆவணங்கள் மனுதாரர் மகன் வழக்கு சொத்திற்கு செலுத்தியுள்ள கந்தாய ரசீதுகள், மனுதாரர் மகன் இறந்த பிறகு மனுதாரர் மகள் பெயரில் மனுதாரர் வழக்கு சொத்தினை பொறுத்து எழுதியுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம், மனுதாரர் மகள் பெயரில் உள்ள வருவாய்த்துறை ஆவணங்கள் ஆகியவைகள் இந்த வழக்கிற்கு முக்கிய ஆவணங்கள் என்பதால் தற்போது மனுதாரர்கள் தரப்பில் ஒப்படைக்க இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும் எடுத்துரைத்தார். ஆனால் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர்கள் அவர்களது மனுவுடன் இணைத்து சமர்பித்துள்ள 4–ம் ஆவணமான 29.03.2004–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரூ.20/– மதிப்புள்ள நீதிமன்றம் சாரா முத்திரை தாளில் எழுதப்பட்டதாக உள்ளது என்றும், மேலும் பதிவும் செய்யப்பட்டிருக்கவில்லை என்றும், இவ்வாறாக உரிய முத்திரை தீர்வை செலுத்தப்படாத மற்றும் பதிவுறா தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல மற்றும் சாட்சியமாகவும் ஏற்கதக்கதல்ல என்றும், இவ்வாறாக

சட்டப்படி செல்லதகா மற்றும் சாட்சியமாக ஏற்கதகா ஆவணத்தை மூலமாக கொண்டே மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள 5–ம் ஆவணத்தை தவிர இதர மற்ற ஆவணங்கள் அனைத்தும் பெறப்பட்டுள்ளது என்றும், எனவே இவைகளும் சட்டப்படி செல்லதக்கதல்ல மற்றும் சாட்சியமாக ஏற்கத்தக்கதும் அல்ல என்றும், எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள 5–ம் ஆவணத்தை தவிர்த்து இதர ஆவணங்கள் எதுவையும் சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்க இயலாது என்றும், *மேலும் IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS – C.R.P. (NPD).No. 675 of 2019 and C.M.P.No. 4425 of 2019 –* (The Hon'ble Supreme Court has rightly understood the law laid down in previous judgments to the effect that the registration of a document is necessary only if the terms of the family arrangements are reduced into writing or if the document contains the terms and recitals of the family arrangement made under the document. It is further stated that a mere memorandum prepared after the family arrangement which had already taken place for the purpose of recording or for information does not require compulsory registration.) என்றும் எடுத்துரைத்தார்.

இருதரப்பு வாதுரை மற்றும் சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலிக்கையில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் மகன் மாதேஸ்வரன் பெயரில் வழக்கு சொத்திற்கு உண்டான வருவாய்த்துறை ஆவணங்கள் மனுதாரர் மகன் வழக்கு சொத்திற்கு செலுத்தியுள்ள கந்தாய ரசீதுகள், மனுதாரர் மகன் இறந்த பிறகு மனுதாரர் மகள் பெயரில் மனுதாரர் வழக்கு சொத்தினை பொறுத்து எழுதியுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம், மனுதாரர் மகள் பெயரில் உள்ள வருவாய்த்துறை ஆவணங்கள் ஆகியவைகள் இந்த வழக்கிற்கு முக்கிய ஆவணங்கள் என்பதால் தற்போது மனுதாரர்கள் தரப்பில் ஒப்படைக்க இந்த மனுவினை தாக்கல் செய்கிறார் என்றும், மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்கு மிக முக்கிய ஆவணங்கள் என எடுத்துரைத்திருப்பதை கருத்தில் கொண்டும், மேற்படி வழக்கு ஆவணங்களை பொறுத்து குறுக்கு விசாரணையில் கேள்வி கேட்க எதிர்மனுதாரருக்கு வழிவகைகள் உள்ளதாலும், அதேபோல் மேற்படி

ஆவணங்களின் மீதான ஆட்சேபனைகள் குறியீடு செய்யும் போது தெரிவிக்கும் பட்சத்தில் அது பரிசீலிக்கப்படும் என்பதாலும், மனுதாரருக்கு அவரது தரப்பு எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு வழங்கலாம் இந்நீதிமன்றம் கருதுவதாலும், மேலும் பல வழக்குகள் உருவாவதை தடுப்பதற்காகவும் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (16.04.2026) இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

**1. மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** **இல்லை .**

**2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** **இல்லை.**

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

**IA.05/2025 in**
**OS.No.167/2021**
**Fair / Draft Order**
**Date : 16.04.2026**